
# யோகர் சுவாமிகள் அருளிய
# சில நற்சிந்தனை முத்துக்கள்



யோகர் சுவாமிகள்



யோகர் சுவாமிகளின் பிரதம சீடர்
சற்குரு சிவாய சுப்பிரமணிய சுவாமிகள் - ஹவாய்

8.8.2001 அன்று சற்குரு சிவாய சுப்பிரமணிய சுவாமிகள் இலண்டன் மாநகருக்கு வருகை தருவதை முன்னிட்டு இந்த நற்சிந்தனை மலர் வெளியிடப்படுகின்றது.
அன்பளிப்பு: யாழ்ப்பாணம் காரைநகர் திருமதி அருளாம்பிகை குணராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்
வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழத்
துள்ளியோடும் தொடர்ந்த வினைகளே

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

பேணும் பெரியபுலப் பிள்ளையார் கோயிலிற்போய்
காணுமிட்ட காமியங்கள் கைவரவே - வேணுமெனில்
அந்திபகல் தொந்திவயிற் றைந்துகரத் தெந்தைபதம்
வந்து வந்து வேண்ட வரும்.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான் தருவேன் -கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா.

வாக்குண்டாம் நல்ல மணமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்பார் தமக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனடி துணை

ஓம் சிவசிவ சிவனடி துணைஓம்
ஓம் சிவசிவ கணபதி துணைஓம்
ஓம் சிவசிவ சிவகுரு துணைஓம்
ஓம் சிவசிவ அடியார் துணைஓம்

அரகர சிவசிவ ஆடும் அடிதுணைஓம்
சுரர்நரர் துதிசெய் தூய அடிதுணைஓம்
பரவும் அடியார் பாடும் அடிதுணைஓம்
கரவுடை நெஞ்சினர் காணக் கழல்துணைஓம்

தில்லையம்பலத் தாடுஞ் சேவடி துணைஓம்
எல்லையில் லாவருள்அருளிய அடிதுணைஓம்
வல்லை வந்தெனை ஆண்டவன் அடிதுணைஓம்
கல்லை நேர்மனங் கரைத்தவ னடிதுணைஓம்

அம்மை யப்பன் அழகிய அடிதுணைஓம்
இம்மைநற் பயன்தரு மீச னடிதுணைஓம்
செம்மை சேர்சிவன் திருவடி துணைஓம்
எம்மை யாண்ட எங்கோன் அடிதுணைஓம்

தேசம் புகழுஞ் சிவன்திரு வடிதுணைஓம்
வாசம் மருவும் மலரடி எந்துணைஓம்
பாசம் அகலும் பரன்திரு வடிதுணைஓம்
ஈச னெந்தை எம்பிரான் னடிதுணைஓம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவத்தியானஞ் செய்

சிவத்தியா னத்தைச் செய்யும் மாந்தர்கள்
அவத்தில் பாரினில் அலைவ தில்லையே

தவத்தை யாற்றிடில் தன்னை யறியலாம்
அவத்தை யாற்றிடில் வீழ்வர் நரகினில்

தில்லை யம்பலந் தாடுஞ்சேவடி
எல்லை யற்றநல் லின்பம் நல்குமே

உள்ளத் தூய்மையாய் ஒருவன் பாதத்தை
உந்து வார்தமக் குணர்வு வந்திடும்

அல்லும் எல்லியும் இறைவன் பாதத்தைச்
சொல்ல வல்லவர் தூய்மை யாவரே

எங்கு மீசனை யேத்துவார் தம்மைப்
பொங்கும் வல்வினை பொருந்த லில்லையே


தெய்வ மொன்றெனத் தெரியும் மாந்தர்கள்
உய்வர் வையத்தில் உண்மை யுண்மையே

எந்த நேரமும் இறைவன் பாதத்தைச்
சிந்தை செய்திடில் தீரும் வல்வினை

அடியவர் பாதத் தன்பு செய்திடில்
கொடிய கூற்றுவன் மடியுந் திண்ணமே

சீலஞ் சேர்சிவ ஞானத் தேனினை
ஞாலத் துண்பவர் நமனை வெல்லுவார்

வாலை வணக்கமாய் மகிழ்ந்த பாவினைக்
காலையும் மாலையும் ஓதக் கவலைபோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கப்பாட்டு

காயமே கோயிலடி தங்கமே தங்கம்
கடவு ளிருப்பிடங்காண் தங்கமே தங்கம்
மாயம னத்தைவெல்லு தங்கமே தங்கம்
மற்றுப்பற்றை நீக்கிவிடு தங்கமே தங்கம்
உபாய மதுவாகுந் தங்கமே தங்கம்
உண்மை முழுதுமடி தங்கமே தங்கம்
ஒருபொல்லாப்பு மில்லையடி தங்கமே தங்கம்
உறுதி யெழுதிக்கொள் தங்கமே தங்கம்
அப்படி யுள்ளதடி தங்கமே தங்கம்
ஆரறிவார் பாரினில் தங்கமே தங்கம்
எப்பவோ முடிந்ததடி தங்கமே தங்கம்
ஏகாந்த மாயிரடி தங்கமே தங்கம்
செப்ப முடியாதடி தங்கமே தங்கம்
சொல்லப்பன் திருவாக்குத் தங்கமே தங்கம்
ஒப்பற்ற வாக்கடிதங்கமே தங்கம்
உடம்பை மறந்துவிடு தங்கமே தங்கம்
அப்பிலுப்புச் சேர்ந்தாற்போல தங்கமே தங்கம்
ஆண்டவனில் கரைந்துவிடு தங்கமே தங்கம்
வெப்பந்தட்ப மில்லையடி தங்கமே தங்கம்
வேதாந்த நெறிநில் தங்கமே தங்கம்
அப்பனு மம்மையுந் தங்கமே தங்கம்
அகத்திலே வாழ்கின்றார் தங்கமே தங்கம்
ஒப்புரவாய் நடந்திடவே தங்கமே தங்கம்
ஒருகறையு மில்லையடி தங்கமே தங்கம்
கைப்போது மலர்கொண்டு தங்கமே தங்கம்
கழலடியைப் போற்றிடடி தங்கமே தங்கம்
முப்போதும் முடிசாய்த்துத் தங்கமே தங்கம்
மூர்த்தியைப் பணிந்திடடி தங்கமே தங்கம்
அப்போதைக் கப்போது தங்கமே தங்கம்
அருள்வடிவங் காட்டுவான் தங்கமே தங்கம்
தப்பேதுஞ் செய்யாதே தங்கமே தங்கம்
தனித்திருந்த பார்த்திடடி தங்கமே தங்கம்
அப்பாலுக் கப்பாலே தங்கமே தங்கம்
ஆருமறி யாரடி தங்கமே தங்கம்
அப்புசுவாமி தன்சொல்லைத் தங்கமே தங்கம்
அகத்திலீ வாதேயடி தங்கமே தங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமானைப் பார்த்துநின் றாடுமயிலே

இராகம் - ஆனந்தபைரவி

ஆடுமயிலே பணிந் தாடுமயிலே
ஆண்டவனைக் கண்டுதெளிந் தாடுமயிலே

வீடுநமக் கெப்போதும் சொந்த மென்றே
வீணாசைப் படுவதெல்லாம் பந்த மென்றே
கூடுவிட் டுயிர்போமுன் கும்பிட்டுக் கொண்டே
குழைந்து குழைந்துநின்றாடுமயிலே (ஆடுமயிலே)

பொறிவழி போம்மனத்தை அடக்கிக் கொண்டே
பூரண நிட்டையிலே மடக்கிக் கொண்டே
அறிவறி யாமையிரண்டும் நாமெல்ல வென்றே
ஆனந்தமாய் பணிந்தெழுந் தாடுமயிலே (ஆடுமயிலே)

எவ்வுயிருந் தன்னுயிர்போல் எண்ணிக்கொண்டே
இரந்திரத் தைந்தெழுத்தைப் பன்னிக் கொண்டே
ஔவியம் பொறாமைகோபம்அகற்றிக் கொண்டே
ஆண்டவனைக் கண்டுதெளித் தாடுமயிலே (ஆடுமயிலே)

ஒருபொல்லாப்பு மில்லையென்ற புத்தியைக் கேட்டே
ஓம்சிவாய நமவெனச் செபித்துக் கொண்டே
குருநாதன் திருவடியைக் கும்பிட்டுக் கொண்டே
கூடிக்க ளித்துநின் றாடுமயிலே (ஆடுமயிலே)

தேசகாலம் யாவையும் மறந்து நின்றே
சிறுபிள்ளையைப் போலமனம் சிறந்து கொண்டே
பேசவுமறி யாமற்பேய்க் கோலங் கொண்டே
பெருமானைப் பார்த்துநின் றாடுமயிலே (ஆடுமயிலே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரான் கிருபை வேண்டும்

1

நல்லூரான் கிருபை வேண்டும் - வேறென்ன வேண்டும்
நமைப்பிரி யானென நம்பிட வேண்டும் (நல்லூரான்)

எல்லா ரிடத்தும் அவன் இருப்பதைக் காணவேண்டும்
கொல்லாமை கள்ளாமை கோபத்தை நீக்கவேண்டும்
(நல்லூரான்)

சொல்லும் பொருளுமற்றுச் சும்மா விருக்க வேண்டும்
அல்லும் பகலுமவன் அடியிணையே தொழவேண்டும்
(நல்லூரான்)

உல்லாசமாக உலகிற் றிரிய வேண்டும்
ஓம் சிவாய நமவென ஓதிக்கொள்ள வேண்டும் (நல்லூ)

பல்லோர்புகழ் நல்லூர்ச் செல்லப்பன் பாதத்தை
பக்தியாய்க் கும்பிட்டுப் பாடிட வேண்டும் (நல்லூரான்)

சொல்லும் யோகசுவாமி தோத்திரப் பாடலை
எல்லோரும் கேட்டு மகிழ்ந்திட வேண்டும் (நல்லூரான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் - சுருட்டி தாளம் - ஆதி

பல்லவி

நல்லூரான் கிருபை வேண்டும் - நாம் எந்நாளும்
பாடவேண்டும் - வேறென்ன வேண்டும்

அநுபல்லவி

சொல்லூம் பொருளுமற்றுச் சும்மா விருக்கவேண்டும்
தூய குருவின்பாதம் துணையாகக் கொள்ளவேண்டும்.
(நல்லூ)

சரணங்கள்

அல்லூம் பகலுஞ்சிவ நாமத்தைச் சொல்லவேண்டும்
ஆசை மூன்றையும் அடியோடு கொல்லவேண்டும்
கண்டு கண்டு மனங் குளிர்ந்திட வேண்டும்
காமக் குரோத மோகத்தைத் தீர்க்கவேண்டும். (நல்லூர்)

பொறிவழி போய்மனம் அலையாமை வேண்டும்
பூரண மான நிட்டையும் வேண்டும்
எல்லா ரிடத்துமன்பு செலுத்த வேண்டும்
எழில்பெறுஞ் சுழுமுனை வழிச்செல்ல வேண்டும் (நல்லூ)

# நானே நீ

என்னுடைய இராச்சியத்தில் இராப்பகலில்லை: நன்மை தீமையில்லை: நீ நானில்லை: இன்றைக்கு நாளைக்கு இல்லை: பெரிது சிறிது இல்லை: நீயுமிந்த இன்பத்தை அனுபவிக்க வேண்டுமாகில், அங்கு முழுமனத்தோடு வெளியேறக் கடவை: புகையிரதம் வேண்டியதில்லை: மாட்டுவண்டி தேவையில்லை: பின் என்ன வேண்டுமாகில் வைராக்கியமென்னும் புதுக்காத வண்டிலும், சாந்தம் என்னும் இரண்டு வெள்ளை எருதுகளும், மனப்பாக்கிய மென்னுஞ் சமையாத சாதமும், யாசகமென்னும் அங்கவஸ்திரமும்,ஞானமென்னும் மூக்குக் கண்ணாடியும் எடுத்துக்கொண்டு பின்முன் நாடாமல் வரக்கடவை. அப்பொழுது நீ காண விருக்கும் காட்சிகளை என்னாற் சொல்ல முடியாது. கடவுளே சாட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவோகம் பாவனை

தெய்வத்தை நம்பு. முழுமனத்தோடு நம்பு, உலகில் உனக்கினியதெனக் தோன்றும் எவற்றிலும் இனியதாக நினை. அதைவிட வேறில்லை என்று நினை. இருக்கும் போதும் நிற்கும் போதும், நடக்கும்போதும், கிடக்கும்போதும் நினை. உனது நரம்பிலும் தசையிலும், இரத்தத்திலுந் தெய்வ மென்னும் நினைவே நிறைவதாக நானில்லை. கடவுளே இருக்கிறாரென எண்ணு. கடவுளைக் கும்பிடுதலே வாழ்வின் இலக்காக வைத்துக்கொள்.எவன் எதை நினைக்கிறானோ அவன் அதுவாகிறான். கடவுளை உனது உள்ளத்தில் வைத்து வளர்ப்பாயாக. எல்லாம் அவருடைய செயலாகுக. ஈற்றில் எல்லாம் அவனாகவே காணப்படும்.

# வீரமாமயில் ஏறும் வேலவ

இராகம்–கரஹரப்பிரியா தாளம்: ரூபகம்

பல்லவி

வீர மாமயில் ஏறும் வேலவ – விளங்கு
கௌரி பாலகா வா

அனுபல்லவி

கானக் குறத்தி மகிழும் பாதா
காக்கும் கடவுள் துதிக்கும் நாதா (வீர)

சரணம்

எனக்கும் உனக்கும் பேத மேனோ
எடுத்துச் சொன்னால் போதம் போமோ
மணக்குஞ் சோலை நல்லூர் வாசா
வணங்கும் யோக சுவாமி நேசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரான் திருவடி

நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்திலே
எல்லாம் மறப்பேனெடி - கிளியே!
இரவுபகல் காணேனெடி 1

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான்மறந்து போவேனோடி - கிளியே
நல்லூரான் தஞ்சமெடி 2

தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எகக்காமெடி - கிளியே!
கவலை யெல்லாம் போகுமடி 3

எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கர்த்தன் திருவடிகள் - கிளியே!
காவல் அறிந்திடெடி 4.

பஞ்சம்படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி - கிளியே!
ஆறுமுகன் தஞ்சமெடி 5

சுவாமி யோகநாதன்
சொன்னதிருப் பாட்டைந்தும்
பூமியிற் சொன்னாலெடி - கிளியே!
பொல்லாங்கு தீருமெடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நின்றும் இருந்தும் நடந்தும் நினைமின்

நிலமண்டில ஆசிரியப்பா

சென்றன சென்றன வாழ்நாள் அனைத்தும்
குன்றின குன்றின செல்வமும் இளைமையும்
ஒன்றிய வகையால் உஞற்றுக அறனைக்
கன்றிய காலன் கணத்தினில்வருவான் ஆதலின்,
நின்றும் இருந்தும் நடந்தும் நினைமின்
பொன்று முடலைப் போற்றுத லொழிமின்
நன்றுதீ தென்னும் நாட்டம் விடுமின்
அன்று மின்றும் என்று மா ஆன்மா
இருந்த படியே இருக்குஞ் சீரை
அருந்தவ யோக ரறிந்தாங் கறிந்து
தெளிந்து சீவன் முத்தராய் உலகில்
பொருந்தி வாழ்தல் போற்றுந் தகைத்தென்.

## சிவதொண்டு

நாங்கள் சிவனடியார்கள். எங்களுக்கு ஒரு குறைவுமில்லை. சிவதொண்டு செய்வதே எங்கள் தொழில்.அதற்காகவே நாங்கள் பூமியில் வாழுகிறோம்.

சந்திரன் சிவதொண்டு ஆற்றுகின்றது. சூரியனும் ஏனைய கிரகங்களும் அத்திருப்பணியையே செய்கின்றன. தேவர்களும், அசுரர்களும் கின்னரர்,கிருபுருடர், வித்தியாதரர்களும் அப்படியே தொண்டாற்றி வருகின்றனர்.

அனைத்துஞ் சிவன் செயல்: அவனன்றி அணுவும் அசையாது. நாம் இழந்து போவதுமொன்றுமில்லை.
ஆதாயமாக்கிக் கொள்வதும் ஒன்றுமில்லை. இருந்தபடியே இருக்கின்றோம்.

நமக்கு ஒப்பாரும் மிக்காரும் ஒருவருமில்லை. நமக்கு இதம் அகிதம் இல்லை. மரணம் பிறப்பில்லை. வேண்டுதல் வேண்டாமை இல்லை. மண்ணாதி ஆசையில்லை. மனமான பேய் இல்லை. காலதேச வர்த்தமான நமக்கில்லை. நாம் அனைத்துக்குஞ் சாட்சியாக விளங்குகின்றோம்.

ஓம் தத் சத் ஓம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் யார்?

நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று, நீ ஆத்மா.

ஆத்மா ஒரு நாளும் அழியாது. இது மகான்களுடைய அநுபவ சித்தாந்தம். இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்றாய்ப் பதியக் கடவது.

ஆனால் நீ கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு, அதாவது தருமநெறியிற் பிசகாதே. எவ்வுயிரும் பெருமான் திருமுன்னிலை என்று சாதனை செய். கடவுள் உள்ளும் புறம்பும் உள்ளவர்.

இப்படிக்கு
அவனே நானே

## அஞ்சேல்

"அஞ்சுவ தியாதொன்றுமில்லை, அஞ்ச வருவதியா தொன்றுமில்லை யென்னு மான்றோர் மெய்ம்மொழி நம்மைப் பிறப்பிறப்பாகிய கடலைக் கடப்பிக்குந் தெப்பம், இதைத் துணையாகக் கொண்ட வெமக்கென்னகுறை? ஆதலால் நிறைந்த மனத்துடன் இந்தப் பெரும் பிரயாணத்தைச் செய்வோமாக.

இப்படிக்கு
என்றும் மறவாதவன்

ஆண்டவனையன்றி வேறொரு பொருளுமில்லை. அனைத்தும் அவன் செயல். உனது சுமை முழுவதையுந் திருவடிக் கீழ் இறக்கி வைத்து இளைப்பாறு. கவலைக்கிடங் கொடாதே. நான் செய்தேன் அவன் செய்தானென்று நலியாதே. விழித்திரு.

நான் உங்களுக்குச் சொல்லக் கூடியது ஒன்றுண்டு. நீங்கள் உங்கள் கடமையை வழுவாது செய்யுங்கள். உங்களுக்குப் பகவான் நல்லருள்புரிவார்.

சிவயோக சுவாமிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

குருபரன் திருவடி வாழ்க

## ஆசான் அருள்மொழி

1. தனிமையாயிரு. விழித்திரு. தூண்டிற்காரனைப் போலவிரு. தைரியமாயிரு.
2. பார்ப்பதெல்லாஞ் சிவமாகப் பார். செய்வதெல்லாஞ் சிவதொண்டாகச் செய். நானென்பதை விட்டு விடு.
3. இன்பமும் துன்பமும் - இகழும் புகழும் மாறி மாறி வரும். இவற்றைக் கண்டு அஞ்சாதே.
4. செத்தாரைப் போலத் திரி. நெஞ்சே பிறர் குற்றங்களை மன்னித்து மறந்திரு.
5. மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர். கீழிருந்தும் கீழல்லார் கீழல்லர்
6. எல்லாரோடும் சமாதானமாகவும் சந்தோசமாகவும் இருப்பதே சமயவாழ்வு.
7. பொய்யும் மெய்யும் புகல வைத்தாய். இதுவும் உன்றன் பேரருளே.
8. சும்மா இருப்பவர்களே உலகின் உண்மையான புரவலர்கள் ஆவார்.
9. அமைதியாயிரு. கடவுள்வரினும் அவருக்கும் ஓர் ஆசனத்தைக் கொடுத்து விட்டுச் சும்மாயிரு.
10. துன்பங்களை எதிர் நோக்கி முன்னதாகவே தயார் செய்ய முயலாதே. வரவரப் பார்.
11. ஒருவனைக் கூடாதவன் என்று நினைக்கும் நினைவே நினைப்பவனுக்கு நஞ்சாகும்.
12. கண்களை மூடிக்கொண்டிருந்தால் போதாது. மனமல்லவோ மூடவேண்டும்.
13. எங்களுக்கு ஒரு குறையுமில்லை. ஒரு குறையுமில்லை என்று உணராதது தான் குறை.
14. நாவை நீ காத்துக்கொள். அன்றேல் உனக்கு தீங்கு நேரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

குருபரன் திருவடி வாழ்க

திருவருள் கைகூடுது சிந்தை களிகூருது

ஆசான் அருள் வாசகம்

# தெய்வீக வாழ்க்கை

இந்த உலகம் மிக நல்லது. இதில் எத்தனை தரமும் பிறக்கலாம். சித்தமாயிருந்தால் ஒன்றுக்கும் பயப்பட வேண்டியதில்லை. முறையாகச் சீவியம் செய்யலாம். கலியாணம் முடித்துத் தெய்வங்களாக வாழ்ந்து ஒரு பிள்ளை இரண்டு பிள்ளைகளைப் பெற்றுச் சுகமாகச் சீவியம் நடத்தலாம். அல்லது சிலர் கலியாணமின்றியும் வாழலாம். ஒவ்வொருவரும் அன்றன்று செய்ய வேண்டியவைகளைக் கிரமமாகச் செய்ய வேண்டும். நாளைக்கு என்ன நடக்கும் என்பது ஒருவருக்கும் தெரியாது. எதை அறிய வேண்டுமென்று கவலைப்பட வேண்டியதில்லை. சுத்தமாகக் குளித்து, சுத்த ஆடை உடுத்து, ஒழுங்காகச் சாப்பிட்டு, அந்தி சந்தி கடவுளை வழிபட்டுச் சீவியம் நடத்தினால் கடவுள் காப்பாற்றி வருவார். என்னென்ன செய்யவேண்டும் என்பதை அவர் சொல்லித்தந்து கொண்டிருப்பார். அவர் எங்களுடன் எப்போதும் இருக்கிறார். அவருக்கு தெரியாமல் யார்தான் என்ன செய்ய முடியும்.

ஓம் தத் சத் ஓம்

# மங்களம் ஜெய மங்களம்

அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்
அத்துவித வஸ்துவுக்கு மங்களம்
ஒப்பில் குரு நாதனுக்கு மங்களம்
உத்தம பத்தருக்கு மங்களம்
முப்பொழுதுந் தொழுவார்க்கும் மங்களம்
மூவாசை வென்றவர்க்கு மங்களம்
முப்பத்து முக்கோடி தேவர்க்கும் மங்களம்
முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம்
தன்னைத் தன்னா லறிந்தவர்க்கு மங்களம்
ஐயமிட் டுண்பவர்க்கு மங்களம்
ஐயமில்லாச் சாதுக்கட்கு மங்களம்
ஆதியந்த மில்லாத ஆன்மாவுக்கு மங்களம்
சீகாழித் தேவருக்கு மங்களம்
திருநாவுக் கரசருக்கு மங்களம்
சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்
திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்
எங்குந் தங்கும் உயிர்களுக்கு மங்களம்

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரவ வரமருள்

மரகத மயில்மேல் வருமுருகா
அரகர சிவசிவ அறுமுகவா
சரவண பவனே சண்முகனே
வரந்தர வாவா என்முன்னே
அரவணி சிவனா ரருள்பாலா
பரவ வரமருள் பரமதயாளா

## ஆரத்தி


ஓம் ஜெய ஜெய ஜெய சக்தி - ஓம்ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய அனுதினம் பாடிப் பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியைத் தா - ஓம் ஸ்ரீஜெய ஜெய ஜெய சக்தி

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் அடைய - அம்மம்மா தேவையெல்லாம் மறைய
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை - ஓம் ஜெய ஜெய ஜெய சக்தி

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈஸ்வரி வரமருள்வாய் - அம்மம்மா ஈஸ்வரி வரமருள்வாய்
கரங்குவித்தோம் இனிக் காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய் - ஓம் ஜெய ஜெய ஜெய சக்தி

காசினியெங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய் - அம்மம்மா கருத்தினில் அன்பருள்வாய்
தேசுடன் வாழக் காட்டடி காட்சி
தேவியுன் அடைக்கலமே - ஓம் ஜெய ஜெய ஜெய சக்தி

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து ஞான நல்லொளி தீபம் வைத்து
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞாலத்திற் கமைதியைத் தா - ஓம் ஜெய ஜெய ஜெய சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இம்மலர் ஜே ஆர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
தொலைபேசி தொடர்புகட்கு: 020 8503 6643

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org